Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.MC.No. 7 / 2023

**DEPOSITION OF RESPONDENT SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | அம்சா | Calling: | இல்லதரசி |
| Father's Name: | விஸ்வநாதன் | Religion: | |
| Village: | மேல்குப்பம் | Age: | 62 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 17.06.2025

எ.ம.சா.2 மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் 7ம் வகுப்பு படித்துள்ளேன். என் மகனுக்கும், மருமகளுக்கும் எங்கு திருமணம் நடைபெற்றது என்றால் வளையாம்பட்டு முருகன் கோவில். அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு பெண் பிள்ளை. என் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக கூறியிருக்கும் நிலையில் திருமணம் நடந்து எத்தனை வருடத்திற்கு பின் ஏற்பட்டது என்றால் சரியாக நினைவில்லை. என் மகனுக்கு விபத்து ஏற்பட்டதற்கான விபத்து பதிவேடு, மருத்துவ சான்றிதழ் ஏதாவது இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகனுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 1 ஏக்கர் நிலம் உள்ளது. 2 வீட்டு மனை உள்ளதா என்றால் 1 வீட்டு மனை உள்ளது. எதிர்மனுதாரராகிய எனது மகன் வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் HMOP 121/2021 என்ற சேர்ந்து வாழக்கோரி தாக்கல் செய்த மனு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. என் மகனுக்கு 1 ஏக்கர் நிலம் உள்ளதால் நிலம் மூலமாகவும், மேஸ்திரி வேலை மூலமாகவும் மாதம் ரூ.25,000/- சம்பாதிப்பாரா என்றால் சரிதான். கணவன் என்பவர் மனைவியை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். அதனால் என் மகன் என் மருமகளுக்கு

மாத ஜீவனாம்சம் தர கடைமைப்பட்டவர் என்றால் சரியல்ல. முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எனது மகன் சொல்லி தான் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். நானும், எனது கணவரும் தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். என் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. மனுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் என் மகனுக்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ஜீவனாம்சம் தர கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

<u>இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 165ன் படி நீதிமன்ற கேள்வி</u>

1. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எத்தனை பிள்ளைகள்?

பதில் – ஒரு பெண் பிள்ளை.

2. தற்போது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெண் பிள்ளை யாருடைய பராமரிப்பில் எத்தனை வருடமாக இருந்து வருகிறார்?

பதில் – 5 வருடமாக என்னுடன் தான் இருக்கிறார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) அம்சா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K